26.09.2024.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்.

OS.27/2018

பி.வா.சா.**1**

**<u>பெயர்-</u>** திரு.பாலமுருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் விவசாயம் செய்து வருகிறேன். குத்தகையின் பயிர் செய்து வருகிறேன். நான் அப்தூல்மாலிக் என்பவரின் சொத்தில் 4 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிர் செய்கிறேன். உத்திராபதி என்பவரின் நிலத்தை குத்தகைக்கு பயிரிடுகிறேன். அதுவும் 4 1/2 ஏக்கர் நிலம் தான். அப்தூல்மாலிக்கின் சொத்து தென்னாமாதேவியில் உள்ளது. உத்திராபதியின் சொத்து அய்யூர் அகரம் திருவாமாத்தூர் இரண்டிலும் சேர்ந்து உள்ளது. எத்தனை வருடமாக பயிர் செய்கிறோம் என்றால் 1999ஆண்டிலிருந்து பயிர் செய்து வருகிறோம். குத்தகைக்கு பயிர் செய்வதற்கு என்னிடம் குத்தகை ரசீது உள்ளது. சொத்தில் நான் பயிரிடுவது தான் எனக்கு வருமானமா என்றால் இல்லை நான் ஓட்டுனராகவும் செல்வேன். கார் ஓட்டுவேன். டிராக்டரும் ஓட்டுவேன். நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. என் குடும்பத்திற்கு சொந்த ஊர் சப்பம்பேட்டை. அது விக்கிரவாண்டி தாலுக்காவில் உள்ளது. எனக்கு திருமணம் 2015ல் திருமணம் ஆனது. 2ம் பிரதிவாதிக்கு 2009ல் திருமணம் ஆனது. ஐயப்பனின் மனைவியின் தங்கையை நான் கட்டியுள்ளேன். ஐய்யப்பன் என்ன வேலை செய்கிறார் என்றால் அவர் விவசாயமும் செய்கிறார். டிராக்டர் ஓட்டுகிறார். அவர் குத்தகைக்கு பயிர் செய்கிறாரா என்றால் நாங்கள் இருவரும் பங்குதாரர்கள் நாங்கள் இருவரும் சேர்ந்து தான் மேற்படி நிலங்களை பயிர் செய்கிறோம். அவர் வருமான வரி செலுத்துகிறாரா என்றால் இல்லை. நாங்கள் இருவரும் கொய்யாதோப்பு என்ற ஊரில் குடியிருக்கிறோம். என் சொந்த ஊருக்கும் அந்த ஊருக்கும் இடையில் சுமார் அரை கி,மீ தூரம் இருக்கும். நான் குடியிருக்கும் வீடு இடம் என் தாத்தா

காத்தமுத்துவின்இடம் தான். அந்த வீடு இருக்கும் இடம் 12 அல்லது 13 சென்ட் இருக்கும். அது பூர்வீக வீடு பழைய வீடு என்றால் இல்லை. 1995ல் கட்டியது ஆகும். அந்த வீட்டில் தான் நாங்கள் அண்ணன் தம்பிகள் மற்றும் பெற்றோர்கள் குடியிருந்தோம். அந்த வீடு இரண்டு வீடு நான்காக பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு வீட்டில் நானும், மற்றொரு வீட்டில் ஐய்யப்பனும் மற்றொரு வீட்டில் 1ம் பிரதிவாதியும் குடியிருக்கிறார்கள். நான்காம் பகுதியில் என் அப்பாவும், அம்மாவும், கோபியும் குடியிருந்தார்கள். 1ம் பிரதிவாதி ஸ்ரீதர் என்பவருக்கு 2000ம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. அவரது மனைவி கோலியனூர் தொடர்ந்தனூர் ஆகும். திருமணம் ஆன சில காலத்திலேயே 1ம் பிரதிவாதி மாமியார் வீட்டுடன் சென்று விட்டார் என்றால் சரிதான். ஸ்ரீதரின் மனைவி வசதியான குடும்பத்தை சார்ந்தவர் என்றால் சுமாரான வசதி தான். ஸ்ரீதரின் மாமனாருக்கு கொய்யாதோப்பு இருந்ததா என்றால் இருந்தது. தற்போது இருக்கிறதா என்று எனக்கு தெரியவில்லை. எனக்கும், ஸ்ரீதருக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. எப்போதாவது பேசுவோம். ஸ்ரீதர் பியர்லேஸ் நிருவனத்தின் ஏஜெண்டாக பணி புரிந்து வந்தார். தற்போது விவசாயம் செய்கிறார். அவர் மாமனார் உயிருடன் இருந்து சுமார் 2015ம் ஆண்டில் தான் தற்போது உள்ள வீட்டிற்கு வந்தார். என் அப்பாவிற்கு சோழகனூர் என்ற ஊரில் உள்ள சொத்தை ஸ்ரீதர் பயிர் இடுகிறார். என் அப்பாவிற்கு மொத்தம் 9 ஏக்கர் 33 சென்ட் நிலம் உள்ளது. அதில் சுமார் 4.1/2 அல்லது 5 ஏக்கர் ஸ்ரீதர் பயிர் இடுகிறார். அது விவசாய நிலம் தான். 4.1/2 ஏக்கர் நிலம் தவிர குடும்பத்திற்கு பாத்தியமான வேறு சொத்துக்களை அனுபவித்து வருகிறாரா என்றால் இல்லை. குடும்பத்திற்கு பாத்தியமான சொத்துக்களை நான் பயிர் வைப்பதில்லை. என் குடும்பத்திற்கு பாத்தியமான சொத்துக்களில் என் தகப்பனார் பயிர் செய்கிறார் என்றால் அவர் பயிர் செய்யவில்லை. 2ம் வாதி கோபி ஏற்கனவே சொத்து பயிர் செய்திருந்தார். தற்போது எந்த சொத்தையும் பயிர் செய்யவில்லை. என் தாத்தா காத்தமுத்து என்பவருக்கு சுமார் 20 ஏக்கருக்கு மேல் அவர் பெயரில் சொத்து இருந்தது. காத்தமுத்துவிற்கு 3 ஏக்கர் அல்லது 4 ஏக்கர் சொத்து கொடுத்தார்கள். காத்தமுத்துவிற்கு எவ்வளவு சொத்து இருந்தது என்பதற்கு நான் ஆவணம் எதுவும் பார்க்கவில்லை. என் அப்பா சொல்லியுள்ளார். காத்தமுத்துவின் மனைவி பெயர் பாப்பாத்தி என்கிற கிருஷ்ணம்மாள். அவருடைய சொத்துக்களை காத்தமுத்து மனைவி பெயரில் கொடுத்துவிட்டாரா என்றால் கொடுக்கவில்லை. காத்தமுத்து 1995 அல்லது 1996ல் இறந்துவிட்டார். பாப்பாத்தியம்மாள் 1971ல் இறந்துவிட்டார்.

காத்தமுத்து இறக்கும்போது என் தகப்பனாருடன் தான் இருந்தாரா என்றால் 5 பிள்ளைகள் இருந்தார்கள். அவருடைய 5 பிள்ளைகளுடனும் இருந்தார். பாப்பாத்தியம்மாள் 02.07.1970ந் தேதியில் ஒரு உயில் ஒன்று எழுதியுள்ளார் என்றால் எழுதவில்லை. அ.சா.ஆ.2 ஆவணம் நானும், என் தகப்பனாரும், சகோதரர்களும் இணைந்து கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். ஸ்ரீதர் மட்டும் அதில் கையெழுத்து போடவில்லை. அந்த கிரைய பத்திரத்தில் 02.07.1970ம் தேதியில் பாப்பாத்தியம்மாள் ஒரு உயில் எழுதியுள்ளார் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

***(குறுக்கு விசாரணை வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பகுதியாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது)***